## நாடி சோதிடத்தில் சாதகச் சோதிடத்தின் தாக்கம்

கோவி. சிவபாலன்
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்

### முன்னுரை

இந்தியர்களின் வாழ்க்கை கலைகளோடும் நம்பிக்கைகளோடும் பின்னிப் பிணைந்தது. இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், மருத்துவம், சோதிடம் என அக்கலைகள் விரிந்து கொண்டே போகும். இவற்றுள் சோதிடக்கலை இந்தியர்களின் நம்பிக்கைச் சார்ந்த கலையாக உருவானது. சோதிடக் கலையுள்ளும் சாதக சோதிடம், கைரேகைச் சோதிடம், எண்கணித சோதிடம், பிரசன்னச் சோதிடம், நாடிசோதிடம், கிளிச்சோதிடம், சகுனச் சோதிடம் எனப் பலப் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் நாடிச் சோதிடம் தற்காலத்தில் மக்களிடையே மிகப் பெரிய ஈர்ப்பை ஏற்படுத்தி அதன் வழி அவர்களுடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தையும் ஏற்படுத்தி வந்துள்ளது. நாடி சோதிடத்தின் வாயிலாகப் பலன் சொல்லும் முறை பிற சோதிட வகைகளிலிருந்து மாறுபட்டுள்ளது. முக்காலமும் உணர்ந்த ஞானியர்களாகிய சித்தர்களால் நாடிசோதிடத்தில் பலன் கூறப்படுகின்றது என்பது பொதுவான நம்பிக்கை. ஆனாலும், சாதகச் சோதிடக் கூறுகளாகிய இராசிக் கட்டம், இராசி, இலக்கனம், கோள்கள், நட்சத்திரங்கள், பன்னிரு பாவங்கள், தசா புத்திகள், மற்றும் கோட்சாரங்கள் போன்றவை நாடி சோதிடப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே நாடி சோதிடப் பலன்கள் விளக்கப்படுவதாகவும் தெரிகின்றது. எனவே நாடி சோதிடத்துக்கும் சாதக சோதிடத்துக்கும் இடையிலான தொடர்பைப் பற்றியத் தெளிவு மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

### கட்டுரையின் நோக்கம்

இக்கட்டுரை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

1. நாடி சோதிடத்தின் உட்கூறுகளை அறிதல்
2. சாதக சோதிடத்தின் உட்கூறுகளை அறிதல்
3. சாதக சோதிடத்தின் தாக்கம் நாடி சோதிடத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் கண்டறிதல்

### ஆய்வின் பின்னணி

1980-களின் பிற்பகுதியில் தொடங்கி ஓலைப் பார்த்தல் எனும் நாடி சோதிடம் மலேசியாவில் அதிக வரவேற்பைப் பெற்று வருகின்றது. அதற்குப் பின் வரும் காரணங்களைக் கூறலாம் (அயலகத் தமிழ் சமகாலச் செல்நெறிகள், 2001, ப.340):

i. முக்காலமும் உணர்ந்த ஞானிகள் பலன் கூறுகின்றார்கள் என்ற நம்பிக்கை.
ii. ஒருவரது வாழ்க்கை இரகசியங்கள் அவரது கட்டைவிரல் ரேகை, தாய் தந்தையர் பெயர், பிறந்த திகதி, நாள், மாதம், வருடம் போன்ற சில குறிப்புகளை வைத்தே கூறப்படுவதனால் ஏற்பட்ட நம்பிக்கை.
iii. "ஊழ்வினை" என்ற அடிப்படையில் மக்கள் முற்பிறப்பில் செய்த வினைகள், அவ்வினைக்கேற்ற இப்பிறப்பு, முற்பிறப்பில் செய்த தீவினைகள் நீங்கி இப்பிறப்பில் சிறப்பாக வாழ்வதற்குரிய வழிவகைகள் (பரிகாரம்) இவற்றில் மக்களுக்கு உண்டான நம்பிக்கை.

மலேசியத் தமிழர்களிடையே நாடிசோதிட ஈடுபாடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு போகின்றது. இந்நாடிசோதிட ஈடுபாட்டின் காரணமாக மக்கள் பல விளைவுகளைப்

*பெற்றிருக்கின்றார்கள். ஆனால் இது நாள்வரை அதன் தாக்கத்தைப் பற்றிய ஆய்வேதும் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்தது. ஆய்வுக்குரிய தேவை உள்ளது என்பதை அறிந்து பணியைத் துவங்கியபோது, இந்த ஆய்வுக்கு நாடிசோதிடத்தைப் பற்றிய அடிப்படை அறிவு தேவை என்பது தெரிந்தது.*

*எனவே, நாடிசோதிடம் பற்றிய தகவல்களைத் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. அவற்றை ஆராய்ந்தபோது, சாதகசோதிடத்தின் பன்னிரு பாவங்கள், நவக்கோள்கள், நட்சத்திரங்கள், இராசி, இலக்னம், தசாபுத்தி, கோட்சாரங்கள் ஆகிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டே நாடிசோதிடப் பலன்கள் கூறப்படுகின்றன என்பது தெரிய வந்துள்ளது. மேலும், இது பற்றிய தெளிவு வேண்டும் என்னும் நோக்கத்தில் விரிவான நூலக ஆய்வும் கள ஆய்வும் தேவைப்பட்டன. மலாயாப் பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடனும் மலாயா நாட்டுக்கோட்டைச் செட்டியார் நிறுவனத்தின் பொருள் உதவியுடனும் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களைச் சார்ந்த கல்வியாளர்கள், நாடிசோதிட ஆசான்கள், சோதிட வல்லுனர்கள் மற்றும் இத்துறை சார்ந்த பிறரும் நேர்காணல் செய்யப்பட்டனர். ஒரு சில நூல்களும் இவ்வாய்வின்போது கிடைத்தன. இவ்வாறு திரட்டப்பட்டத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வின் முடிவுகளை வெளிப்படுத்தும் வண்ணம் இக்கட்டுரைப் படைக்கப்படுகின்றது.*

**நாடி சோதிடம்**

*நாடி சோதிடம் என்பது ஒருவரைப்பற்றி ஏற்கனவே எழுதி வைத்திருந்ததாகக் கருதப்படும் ஏடுகளை/ஓலைகளை, கட்டைவிரல் ரேகை, பிறந்த தேதி, நேரம் ஆகியவற்றின் மூலம் அடையாளங்கண்டு அவர் தொடர்பான முக்காலக் குறிப்புகளையும் வாசித்து விளக்கம் கூறும் ஒரு கலையாகும். முக்காலமும் உணர்ந்த மெய்ஞ்ஞானிகளாகிய அகத்தியர், கௌசிகர், வசிஷ்டர், காகபுசுண்டர், சப்தரிசிகள் போன்றோர் இவற்றை எழுதியதாகக் கருதப்படுகின்றது (சோதிடவியல், 1996, ப. 49). எனவே இவை சித்தர்களின் பெயராலேயே அகத்திய நாடி, கௌசிக நாடி, வசிஷ்ட நாடி, புசுண்டர் நாடி, சப்தரிசி நாடி, சோதி நாடி, குமர நாடி, மீனாட்சி நாடி என அழைக்கப் பெறுகின்றன. இக்கலை, நாடி சோதிடம், ஓலைப் பார்த்தல், ஏடு பார்த்தல், காண்டம் பார்த்தல், நாடி வாக்கியம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. ஓலை வாசிப்பவர் அல்லது நூலாசான் எனப்படுபவர் மேற்கூறப்பட்டது போன்ற நாடிகளைப் படித்தே மக்களுக்குப் பலன் சொல்கின்றார்.*

**நாடி சோதிட வரலாறு**

*நாடிசோதிடம் பன்னெடுங்காலத்துக்கு முன்பே முக்காலமும் உணர்ந்த ஞானியர்களால் மனிதகுலத்துக்கு அருளப்பட்ட அரிய கலை. இக்கலையை முன்னோர்கள் பரம்பரையாக வளர்த்து வந்துள்ளனர். குடும்ப பாரம்பரியமாகவோ, குருவழி பாரம்பரியமாகவோ இது மேற்கொள்ளப் பட்டுள்ளது. பாரம்பரியமாக வளர்க்கப்பட்டு வரும் கலையாதலால் முனிவர்கள் உருவாக்கித் தந்த மூலத்தன்மைக் கெடாமல் இது போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அகத்திய மாமுனிவர் இக்கலையை அருளியதாக அறியப்படுகிறது. அகத்தியர் வழிவந்த சீடர்கள், ஆண்டாண்டு காலமாக அகத்தியர் பெயரிலேயே நாடி சோதிட குறிப்புகளை எழுதி வந்ததாக நம்பப்படுகிறது. எனவேதான் அகத்தியர் பெயரால் எண்ணிக்கையில் அதிகமான நாடிகள் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றன. குருவிடம் சீடர்கள் பன்னிரெண்டு ஆண்டுகாலம் குருகுலவாசத்தில் இருப்பார்கள். குரு சொல்வதையெல்லாம் குறிப்பெடுத்துக் கொள்வதும் சோதிடம் கற்றுக் கொள்வதும் அவர்களது பணிகளுள் ஒன்றாக இருந்துள்ளன. இச்சீடர்கள் குருநிலையெய்திய பின் அவர்களே நாடிகளை உருவாக்குவார்கள். பெரும்பாலோர் அகத்தியர்*

பெயரிலேயே நாடி எழுதிவந்துள்ளதாக சுவடிகளிலுள்ள குறிப்புகள் உணர்த்துகின்றன. அகத்தியரைப் போலவே கௌசிகர், வியாசகர், வசிஷ்டர் போன்ற முனிவரிகளும் இம்முறையைப் பயன்படுத்தி சீடர்களின் மூலம் ஒரு பாரம்பரியத்தைத் தொடரச் செய்தனர்.

தமிழகத்தின் நாடிசோதிட மையமாகத் திகழ்வது சிவத்தலங்களுள் ஒன்றான வைதீஸ்வரன் கோவிலாகும். இன்று தமிழகத்திலும் வெளி நாடுகளிலும் நாடி படிக்கின்ற நூலாசான்கள் இங்கிருந்துதான் நாடிகளைப் பெறுகின்றார்கள் (நேர்காணல், ஏ. எம். சண்முகம்). நாடி சோதிடத்தின் துணைக்கொண்டு ஒருவருடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அறிந்துகொள்ளலாம். கலியுகத்தில் பிறக்கும் அத்தனை பேருக்கும் ஏடுகள் எழுதப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது (நேர்காணல், சௌந்திரராஜன்). அதுமட்டுமல்லாமல், ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய ஏட்டைப் பார்க்க வரும் நாள், தேதி, நேரம் குறித்த தகவல்களும்கூட ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டிருப்பதாகவும் அத்தகவல்கள் அந்நாடியிலேயே குறிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. வட்டெழுத்து முறையில் எழுத்துகள் எழுதப்படுகின்றன (நியூ ஸ்திரேட் டைம்ஸ், ஆகஸ்ட் 20, 2007, ப. 12). குறியீட்டுச் சொற்களும் மறைபொருளும் கொண்ட எழுத்து நடை இந்த சுவடிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அந்தாதிப் பாடலமைப்பில் செய்திகள் விளக்கப்படுகின்றன.

**நாடிசோதிடம் பார்க்கப்படும் முறை**

ஆண்களுக்கு வலது கை பெருவிரல் இரேகையும் பெண்களுக்கு இடது கை பெருவிரல் ரேகையும் மையில் ஒத்திக் கொள்ளப் பட்டு ஒரு வெள்ளைத் தாளில் பதிவு செய்யப் படுகின்றன. அதன் பிறகு, இரேகையின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஓலைச்சுவடிக் கட்டு அடையாளம் காணப்படுகின்றது. அக்கட்டிலிருந்து சாதகருக்குரிய சரியான ஓலைத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருடைய பெயர், தாய், தந்தை, உடன் பிறந்தவர்களின் பெயர்கள், அவர்களின் எண்ணிக்கை, அவர்களுக்குள்ள சொத்து, தொழில், கல்வி உள்ளிட்ட பல்வேறு விவரங்களைத் துல்லியமாகத் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. இந்த விவரங்கள் அனைத்தும் சரியாக கண்டறியப்பட்டப்பின்னரே ஒருவரின் எதிர்காலத்தைப் பற்றிய பலன்களைச் சொல்கின்றனர் (நேர்காணல், வைதீஸ்வரன் கோவிலைச் சேர்ந்த ராமலிங்கம், முரளி, ஜெயந்தன், வாசு, கணேசன், பெருமாள்).

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் 108 பெருவிரல் இரேகை பதிவுகளுக்குள் அடங்குகின்றனர். இந்த 108 பதிவுகளுக்குள் சிறு சிறு வேறுபாடுகளின் அடிப்படையில் பல உட்பிரிவுகள் இருப்பதாகவும், ஒருவருடைய பெருவிரல் இரேகை அமைப்பை அல்லது வடிவைக் கொண்டே அந்த நபருக்குரிய ஓலைச்சுவடி கண்டுபிடிக்கப்படுகிறது எனவும் அறியப்படுகிறது (நேர்காணல், ஏ. எம்.சண்முகம்).

ஒருவருடைய பெருவிரல் இரேகைப் பதிவு, மற்றவர்களுடைய இரேகைப் பதிவிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. பெருவிரல் இரேகை வடிவத்தைக் கொண்டு அதனைப் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். ஒரு இரேகைப் பதிவின் வடிவத்தைக் கொண்டு அதற்குரிய ஓலைச்சுவடிக்கட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இரேகையின் மலர்ச்சுழி, புள்ளி, இரட்டைச் சுழி, இருபுள்ளி, நேர்க்கோடு, பல புள்ளி போன்ற விவரங்களைக்கொண்டு சுவடித் தேடப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஓலைக்கட்டில் உள்ள ஓலைச்சுவடிகளிலிருந்து கேள்விகளை எழுப்பி அதற்கான பதில்களைப் பெற்று அந்த நபருக்குரிய சரியான ஓலை கண்டுபிடிக்கப்படுகிறது (நேர்காணல், அகஸ்தீஸ்வரன்).

**பன்னிரு காண்டங்கள்**

*ஒரு சாதகருக்குரிய சரியான ஓலை அடையாளம் காணப்பட்டப் பிறகு அவருக்குரிய பொதுப்பாவம் என்னும் முதலாவது காண்டம் வாசிக்கப்படும். சாதகருக்குரிய பல்வேறு வாழ்வியல் பலன்களைத் தெரிந்து கொள்ள பன்னிரெண்டு ஓலைக்கட்டுகளிலிருந்து பலன் சொல்வார்கள். இவற்றைப் பன்னிரெண்டு காண்டங்கள் என அழைப்பர். பொதுப்பாவம் தொடங்கி அமைந்துள்ள அப்பன்னிரெண்டு பாவங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள் (நேர்காணல்,சொக்கலிங்கம்):*

**முதலாவது காண்டம்**

*கை பெருவிரல் இரேகையைக் கொண்டு சாதகரின் பொதுக்காண்டத்தைக் கண்டுபிடித்து, பன்னிரெண்டு பாவ பலன்களைச் சுருக்கமாகக் கூறுவதாகும். தொடர்ந்து வரும் மற்ற காண்டங்களைப் படித்துப் பலனைத் தெரிந்து கொள்ள இந்தக் காண்டம் அவசியம் பார்க்கப்படவேண்டும். இக்காண்டத்தைப் பார்க்காமல் மற்ற காண்டங்களைப் பார்க்க முடியாது.*

**இரண்டாவது காண்டம்**

*குடும்பம், தனம், வாக்கு, கல்வி, கண் பார்வை முதலியவைகளைப் பற்றிக் கூறும்.*

**மூன்றாவது காண்டம்**

*இளைய சகோதரன், சகோதரிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களால் வரும் நன்மை தீமைகள், மனத்துணிவைப் பற்றியும் வீர தீர பராக்கிரமச் செயல்களைப் பற்றியும் இக் காண்டம் விவரமாகக் கூறும்.*

**நான்காவது காண்டம்**

*தாயார், மனை, நிலங்கள், வாகனம், வாழ்க்கையில் அடையும் சுகங்கள், புதையல் மற்றும் மகிழ்ச்சிகளைப் விவரமாகக் கூறும்.*

**ஐந்தாவது காண்டம்**

*குழந்தைகள் பிறப்பு, இறப்பு, புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் மற்றும் குழந்தைகள் இல்லாததற்குக் காரணம், பூர்வசென்ம புண்ணியம் முதலியவைகளைக் கூறும்.*

**ஆறாவது காண்டம்**

*வாழ்க்கையில் ஏற்படும் பகை, நோய், கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள், இத்தொல்லைகள் நீங்கும் வழிகள் போன்றவற்றைக் கூறும்.*

**ஏழாவது காண்டம்**

*திருமணக்காலம், அது பற்றிய விளக்கம், திருமண தாமதத்துக்கான காரணம், எந்தத் திசையில் எப்படிப்பட்ட வரன் கிடைக்கும், பாராட்டு, பரிசுகள், பெயர், புகழ் போன்றவற்றைக் கூறும்.*

**எட்டாவது காண்டம்**

*ஆயுளைப் பற்றியும், எத்தனை வயது வரை உயிர் வாழலாம், இடையில் ஏற்படும் கண்டங்கள், விபத்துகள் முதலியவைகளை விளக்கமாகக் கூறும்.*

**ஒன்பதாவது காண்டம்**

*தகப்பனார், செல்வம், யோகம், ஆலய தரிசனம், குருவினிடத்து உபதேசம் பெறுதல், வாழ்க்கையில் கிட்டும் பாக்கியங்கள் முதலியவைகளை விளக்கமாகக் கூறும்.*

**பத்தாவது காண்டம்**

*தொழில், வியாபாரம், எந்த விதமான வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக வருமானம் கிடைக்கும் என்பதைக் கூறும்.*

***பதினோறாவது காண்டம்***

*இலாபம் எந்தெந்த வகையில் அதிகமாகக் கிடைக்கும் என்பதையும் இரண்டாவது விவாகம் பற்றியும், மூத்த உடன்பிறப்புகள் பற்றியும் கூறும்.*

***பன்னிரெண்டாவது காண்டம்***

*செலவு எவ்வகையில் ஏற்படும், ஏற்படக் காரணம், வெளிநாட்டுப் பயணமும் அதனால் ஏற்படும் நன்மைகளும், வீடு பேறு, அடுத்த பிறவியில் பிறக்குமிடம், வாழும் தன்மை போன்றவற்றைக் கூறும்.*

*மேற்கண்ட பன்னிரு காண்டங்களைத் தவிர சிறப்புக் காண்டங்கள் என சில காண்டங்கள் பார்க்கப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை இடங்களுக்கு இடம் மாறுபடுகின்றன (நேர்காணல், கோவிந்தன்). அவை பின்வருமாறு:*

***சிறப்புக் காண்டங்கள்***

***சாந்தி காண்டம்***

*முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை தீமை, இப்பிறவியில் அனுபவிக்கும் துன்பங்கள், அவை நீங்குவதற்குரிய வழிகளைப் பற்றிக் கூறும்.*

***தீட்சைக் காண்டம்***

*மந்திரத்தைப் பற்றிக் கூறுவதாகும். எந்த மந்திரம் உருவேற்றி தாயத்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்பத்தின் காரியமும் வெற்றி அடையும் என்பதைப் பற்றி கூறும்.*

***ஔஷத காண்டம்***

*மருந்துகளைப் பற்றிக் கூறுவது, தீராத நோய்களுக்குரிய மருந்து அல்லது மூலிகை, அது கிடைக்குமிடம், சாப்பிடும் முறைகள், உணவுப் பத்தியங்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறும்.*

***ஞான காண்டம்***

*இது ஒரு சாதகரின் ஆன்மீகப் பாதையைப் பற்றிய விளக்கத்தைக் கொடுக்கும். ஞான வாழ்க்கை, அமைகின்ற குரு, ஆன்மீகப் பயிற்சிகள் போன்ற பல செய்திகளை இதன்வழி அறிந்து கொள்ளலாம்.*

***சிந்தனை காண்டம்/பிரசன்ன காண்டம்***

*ஒருவர் நாடி பார்க்க வருகின்ற பொழுது என்ன சிந்தனைகளை அல்லது கேள்விகளை மனதில் சுமந்து வருகின்றாரோ அவற்றுக்கான விளக்கங்கள்/பதில்கள் இந்த நாடியில் இடம்பெற்றிருக்கும்.*

***தசாபுத்தி காண்டம்***

*வாழ்க்கையில் நடக்கும் தசைகள், புத்திகள், நடக்கும் பலன்கள் ஆகியவற்றை விவரமாகவும் விளக்கமாகவும் கூறும்.*

***நாடி சோதிடத்தில் சாதகச் சோதிடக் கூறுகள்***

*சாதகசோதிடத்தின் அடிப்படைக் கூறுகளாக பன்னிரு பாவங்கள், நவக்கோள்கள், நட்சத்திரங்கள், இராசி, இலக்னம், தசாபுத்தி, கோட்சாரங்கள் உள்ளன. இக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே நாடிசோதிடத்தில் பலன் சொல்லப்படுகின்றது. நாடிசோதிடம் அடிப்படையில் பன்னிரெண்டு காண்டங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இப்பன்னிரெண்டு காண்டங்களும் சாதகச் சோதிடத்தின் பன்னிரு பாவங்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. முதல் காண்டம்*

*முதல் பன்னிரெண்டாவது காண்டம் வரையிலான காண்டங்கள் தரும் விவரங்கள் சாதகசோதிடத்தில் இலக்கினம் முதல் பன்னிரெண்டாவது இராசி வரையிலான வீடுகளுக்குண்டான பன்னிருபாவ விளக்கங்களாகும். ஒரு சாதகருக்குரிய சரியான ஓலை அடையாளம் காணப்படுவதற்கு முன்பாக நாடி சோதிடர்கள் அவருக்குரிய இராசிக் கட்டத்தைப் போடுகின்றார்கள். இந்த இராசிக் கட்டம் சுவடியில் குறிப்பிடப்படும் சாதகருக்குரிய கோள்களின் அமைப்பை வைத்தே போடப்படுகின்றது. எடுத்துக் காட்டாக ஒரு சாதகரின் சுவடியில் இடம்பெற்ற பாடலைக் காண்போம்:*

*"மேலான சிரிமுகவாம் ஆண்டுதோற்றம்*
*மீனதுவின் திங்களதில் தசமாற்திகதி சாலசேய்*
*வாரமதில் சுவாதிமீனில் சாற்கவி வேங்கையதில்*
*மதிகுருதுூக்கு தூக்கடுத்து அரவுதேள் சிகியும் ஏரில்*
*தறியகவி கொண்டலதில் ரவியும்மீனம்*
*சோகமிலா மற்றோர்கூன் நவக்கோளிவ்வார்*
*சாதகனே வினைதோற்றம் நன்றோரில்லம்"*

*மேற்கண்ட பாடல் சாதகர் பிறந்தபொழுது இருந்த சாதக அமைப்பைக் குறிப்பிடுகின்றது. இலக்கினம் சிம்ம இராசியிலும், குருவும் சந்திரனும் துலா இராசியிலும், இராகு விருச்சிக இராசியிலும், புதன், செவ்வாய், சனி ஆகிய கோள்கள் கும்ப இராசியிலும், சூரியன் மீன இராசியிலும், சுக்கிரன் மேஷ இராசியிலும், கேது ரிஷப இராசியிலும் அமைந்துள்ளன. எனவே இந்த சாதகருக்கு சிம்ம இலக்கினம், துலா இராசி, சுவாதி நட்சத்திரம் ஆகும்.*

*நாடி சோதிடத்தில், சாதகசோதிடத்தில் இருப்பது போன்ற பன்னிரு பாவங்கள், கோள்கள், நட்சத்திரங்கள், இராசி, இலக்கினம் ஆகியவற்றின் குறிப்புகள் இடம் பெற்றுள்ளது இதன்வழி தெளிவாகின்றது. நாடிசோதிடர், சுவடியில் இடம்பெற்றுள்ள பாடல்களில் வந்துள்ள இந்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் இராசிக் கட்டத்தை உருவாக்குகின்றார். ஆனாலும் இந்த இராசிக்கட்டத்தைக் கொண்டு நாடிசோதிடர் பலன் சொல்வதில்லை. மாறாக சுவடியில் வந்துள்ள பாடல்களைப் படித்து அவற்றுக்கான விளக்கங்களை மட்டுமே சாதகர்களுக்குக் கொடுக்கின்றார். எனவே சுவடியில் பாடல் வடிவில் உள்ள நாடிசோதிடப் பலன்கள் சாதகச் சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.*

***முடிவுரை***

*இந்தியர்களுடைய சோதிடக் கலைகளுள் பெரும்பான்மையானவை சாதக சோதிட முறையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன. சோதிடக் கலைகள் பலவாக இருந்தாலும் அவற்றின் அடிப்படை வானவியல் கலையைக் கொண்டுதான் அமைந்துள்ளன என்பது இதன் வழி புலனாகின்றது. வானவியல் கலை நமது ஞானியர்களாகிய சித்தர்களால் உலக நன்மைக்காக அருளப்பட்டவை. அச்சித்தர்களோ பிரபஞ்சத்தைத் தமக்குள் அடக்கிக் கொண்டவர்கள்; எல்லாக் கலைகளுக்கும் மூலமாக இருப்பவர்கள். எனவே அஞ்ஞானியர்கள் உருவாக்கித் தந்துள்ள நாடிசோதிடக் கலையில் சாதகசோதிடத்தின் தாக்கம் இருப்பதில் வியப்பில்லை.*

***சான்றாவணங்கள்***

*சிவபாலன், கோவி., 2001, "மலேசியத் தமிழர்களின் வாழ்வில் சோதிடக் கலை ஏற்படுத்தியுள்ள தாக்கம்", அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகால செல்நெறிகள், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*சுப்பிரமணியம், பூ., 1991, சுவடி இயல், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

Suganti Subramaniam, Leafing through your life, New Straight Times, Kuala Lumpur, August 20, 2007.